
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1087

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

44

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

## பல நூற்றாண்டு அநீதியை உதறித்தள்ளிய நல்லிசெட்டிபாளையம்!

தமிழ்நாட்டு ஊடகங்களைத் தாண்டி அகில இந்திய ஊடகங்கள் வரை செய்தியாகிக் கவனம்பெற்ற போராட்டமாக மாறியது, குருக்குளையாம்பாளையத்தில் நடைபெற்ற பொதுக்குழாயில் தண்ணீர் எடுக்கும் போராட்டம். அதன் வெற்றி காரணமாக, அன்னூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பரவலாக நிலவிய தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகத் துணிச்சலோடு செயலாற்றத் தொடங்கியது பெரியார் திராவிடர் கழகம்.

குறிப்பாக, இரட்டைக்குவளை முறை மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்கள் தேநீர் குடித்த தம்ளர்களை அவர்களேதான் கழுவி வைக்க வேண்டுமென்ற நிலைமையும் அங்கு இருந்தது. அதேபோல, நல்லிசெட்டிபாளையத்தில் இருந்து 15 கி.மீ தொலைவில் உள்ள ஊர், அக்கரை செங்கப்பள்ளி கிராமம். அங்கு, சலூன் கடையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு முடிவெட்ட அனுமதி மறுக்கும் அவலம் இருந்தது. இப்படி, அன்னூர் முழுவதும் பல்வேறு கிராமங்களில் வித விதமான சாதி ஆதிக்கம் நடைமுறையில் இருந்தது. நல்லிசெட்டிபாளையத்தில் உருவான பெரியார் படை, இந்த சாதி ஆதிக்கங்களை ஒவ்வொன்றாகத் தவிடுபொடியாக்கியது.

இப்போது, சுற்றுப்புற கிராமங்களில் எங்கும் இரட்டைதம்ளர் முறை நடைமுறையில் இல்லை. 'தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முடிவெட்ட மாட்டோம், தண்ணீர் தர மாட்டோம்' என்று சொல்ல எவருக்கும் துணிச்சல் இல்லை. அதே வேளையில், இன்றும் நடைமுறையில் இருக்கும் இரட்டைச் சுடுகாடு முறைக்கு



> "நல்லிசெட்டிபாளையம் பெரியார் நகரில், இளைஞர்கள் மத்தியில் மூடநம்பிக்கைகள் இல்லாமல், பகுத்தறிவுச் சிந்தனை வளர்ந்துள்ளது. எதையும் ஏன், எதற்கு? என்று கேள்வி கேட்கிற துணிச்சல் வந்திருக்கிறது. எல்லோரும் கல்லூரி செல்கிறார்கள், ஆண்களைவிட பெண்கள் அதிகமாகப் படிக்கிறார்கள். இந்த மாற்றத்திற்குக் காரணம், நாங்கள் ஏற்றுக்கொண்ட பெரியார்."
>
> **ராமன்,**
> **அன்னூர் ஒன்றியத் தலைவர்,**
> **தந்தை பெரியார் திராவிடர் கழகம்.**

எதிராகப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. 2013-ஆம் ஆண்டில், தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில், நல்லிசெட்டிபாளையத்தில் ஒன்றரை சென்ட் நிலம் வாங்கி, பெரியார் இளைஞர் நற்பணி மன்றம் ஒன்றைத் தொடங்கினர். அந்த இடத்தில், தந்தை பெரியார் படிப்பகம் ஒன்றை அமைத்துள்ளனர். அங்கு குழந்தைகளுக்கு டியூஷன், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை அளிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

பெண்களை இடுகாட்டிற்கே அழைத்துச் செல்ல மறுக்கும் பொதுச்சமூகத்தின் பிற்போக்குச் சூழலுக்கு மத்தியில், நல்லிசெட்டிபாளையத்தில் எவரேனும் இறந்தால், பெண்களே அவர்களின் உடல்களைச் சுமந்துசென்று, சுடுகாட்டில் அடக்கம் செய்யும் வழக்கத்தைத் தொடங்கிவைத்திருக்கிறது, தந்தை பெரியார் திராவிடர் கழகம். ஊரில் கோயில் விழாக்கள் நடைபெற்றாலும், 10 ஆண்டுகளாக அங்கு நடைபெறும் தமிழர் திருநாள் - பொங்கல் விழாக்கள்தான் முதன்மையானவை. தனித்தமிழில் பெயர்சூயட்டும் கலாச்சாரமும் பெரியார் தொண்டர்களால் அங்கு உருவாகியிருக்கிறது.

ஒரு நூற்றாண்டாகச் சுமந்துவந்த சமூக அநீதிகளை இருபது ஆண்டுகளில் உதறித் தள்ளியிருக்கிறார்கள், நல்லிசெட்டிபாளையம் தாழ்த்தப்பட்ட மக்கள். அந்தத் துணிச்சலின் முகவரியாக இருந்திருக்கிறார் பெரியார். அதனால் ஊரின் ஒரு பகுதிக்கு பெரியார் பெயரைச் சூட்டி, தற்போது பெரியார் சிலையையும் அம்பேத்கர் சிலையோடு சேர்த்து வைக்க ஆயத்தமாகியிருக்கிறது, தந்தை பெரியார் திராவிடர் கழகம். ஆறடியில் உயர்ந்து நிற்கப்போகும் பெரியார், அம்பேத்கர் சிலைகள் காலத்துக்கும் சொல்லப் போகிறது, தீண்டாமைக் கொடுமைகளை ஒழித்த வரலாற்றை; சாதி ஒழிப்புக்கான வழியை.

...பயணிப்போம்.

## தீர்ப்பும் சில கேள்விகளும்...

சனாதன ஒழிப்புப் பேச்சு தொடர்பான வழக்கில், உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நீதிபதியின் தீர்ப்பு அபத்தமானது என மார்க்சிஸ்ட் கட்சி தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது. இதுதொடர்பாக, அக்கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில், மதுரை உயர் நீதிமன்றக் கிளையின் தனி நீதிபதி தீர்ப்பில் கூறியுள்ள கருத்துகள் நீதி சார்ந்ததாகவோ, சமூக யதார்த்தங்களை உள்வாங்கியதாகவோ, அரசியல் சாசனத்தின் விழுமியங்களுக்கு உட்பட்டதாகவோ இல்லையென்பதை அழுத்தமாகச் சுட்டிக்காட்டுகிறோம். மிகவும் தவறான, ஆபத்தான விளக்கத்தை, நீதிபதி முன்வைத்து இருக்கிறார்.

ஒரு பிற்போக்குச் சித்தாந்தத்தை, மக்களை சாதிகளாகப் பிரித்து உயர்வு தாழ்வு கற்பிக்கும் கருத்தியலை எடுத்து வைக்கிறார்.

சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்துபவர்களுக்காக சமூக ஏற்பை விதைப்பதற்கான ஒரு கருத்தாக்கத்தை ஒழிப்பது என்பது, எப்படி அதைப் பின்பற்றுபவர்களை ஒழிப்பதாக மாறும்? அண்ணல் அம்பேத்கர் அவர்கள் 'சாதி ஒழிப்பு' பேசினார். அதன் பொருள் என்ன? சமூகத்தில் மனிதரை மனிதர் இழிவுபடுத்துகிற, பாகுபடுத்துகிற, வேறுபடுத்துகிற சாதி என்கிற கட்டமைப்பு உடைத்தெறியப்பட வேண்டும் என்பதுதானே.

ஒழிப்பு என்பதாலேயே படுகொலைக்கான தூண்டுதல் என்று சொன்னால், ஏற்க முடியுமா? வறுமை ஒழிப்பு, லஞ்ச ஒழிப்பு என்று கூறுவதெல்லாம் சம்பந்தப்பட்ட மக்களை ஒழித்துக் கட்டுவது என்று பொருள் ஆகிவிடுமா?

சனாதனம் என்றால் நித்தியமானது, அழிவற்றது என்று கூறுவதே அறிவியலுக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் தடை அல்லவா? இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருந்தால், பெண் கல்வி சாத்தியம் ஆகி இருக்குமா? சாதாரண அலுவலக ஊழியரில் துவங்கி, நீதிபதிகள் வரை பெண்கள் அமர்ந்திருப்பது சனாதனக் கருத்தியலை எதிர்த்த போராட்டத்தின் விளைவுதானே.

ஆகவே, இந்தத் தீர்ப்பு ஏற்கத்தக்கதல்ல" என பெ.சண்முகம் அவர்களின் அறிக்கை பலகேள்விகளை எழுப்பியுள்ளது.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

94

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

## ஓய்வூதியத் திட்டம் : குற்றச்சாட்டுகள் சரியா?

**அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் கோரிக்கை வைத்த பழைய ஓய்வூதியத் திட்டத்தை வழங்காமல், வேறு திட்டத்தை தி.மு.க. அரசு, தேர்தல் கண்ணோட்டத்தில் அறிவித்திருப்பதாக அ.தி.மு.க., பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் குற்றம்சாட்டுகின்றனவே?**

பழைய ஓய்வூதியத் திட்டத்தைப் பறித்தது யார்? 2003-ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாதான் பறித்தார். தங்களின் கோரிக்கைகளுக்காகப் போராடிய அரசு ஊழியர்களை 'எஸ்மா', 'டெஸ்மா' சட்டத்தின் கீழ், நள்ளிரவில் வீடு புகுந்து கைது செய்து, சிறையில் அடைக்கச் செய்தார்.

கடந்த 23 ஆண்டுகளாக அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடி வருகிறார்கள். அதில், பழைய ஓய்வூதியத் திட்டம் முக்கியமானது.

திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் பொறுப்பேற்றதிலிருந்து அவர்களின் கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றித் தந்தார். பழைய ஓய்வூதியத் திட்டமே தேவை, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமான புதிய ஓய்வூதியத் திட்டம் தேவையில்லை என ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் தொடர்ந்து




வலியுறுத்தி வந்தனர்.

நிதி நிலைமை சீரானதும் நிச்சயம் நிறைவேற்றுவதாக முதலமைச்சர் உறுதியளித்தார். பத்தாண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் பள்ளத்தில் இருந்த தமிழ்நாட்டை கடந்த 4 ஆண்டுகளில் மேலே கொண்டு வந்துள்ளார் முதலமைச்சர்.

அதன் விளைவாக, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் எனும் புதிய ஓய்வூதியத் திட்டத்திற்குப் பதில், தமிழ்நாடு உறுதியளிப்பு ஓய்வூதியத் திட்டம் (TAPS) என்ற புதிய திட்டத்தை அறிவித்து, அதற்கான அரசாணையையும் வெளியிட்டுள்ளது தமிழ்நாடு அரசு. இதன்படி, அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் பணி ஓய்வுபெறும் கடைசி மாதத்தில், என்ன ஊதியம் பெறுகிறார்களோ, அதில் 50% அடுத்த மாதம் முதல் ஓய்வூதியமாகக் கிடைக்கும். கிராஜுவிட்டி எனப்படும் பணிக்கொடை 25 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் அவரவர் பணிக்காலத்திற்கேற்ப கிடைக்கும். அகவிலைப்படியும் ஓய்வூதியதாரர்களுக்கு உண்டு. ஓய்வூதியதாரர் இறக்க நேரிட்டால், அவருடைய குடும்பத்தாருக்கு, ஓய்வூதியப் பணத்தில் 60% மாதா மாதம் கிடைக்கும். அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் ஆகியோரின் ஊதியத்திலிருந்து பிடிக்கப்படும் 10% தொகையுடன், மேற்சொன்ன அளவிலான ஓய்வூதியம், பணிக்கொடை, அகவிலைப்படி, குடும்பத்தாருக்கான ஓய்வூதியம் ஆகியவற்றுக்காக கூடுதலாக செலவாகும் தொகையை மாநில அரசே ஏற்றுக்கொள்ளும் என்பதுதான் தமிழ்நாடு அரசின் உறுதியளிப்பு ஓய்வூதியத் திட்டம்.

2003-ஆம் ஆண்டுக்குப் பிறகு, வேலைக்குச் சேர்ந்தவர்கள் ஓய்வு பெறுவதற்கு இன்னும் ஆண்டுகள் இருக்கின்றன. எனவே, இது தேர்தல் கண்ணோட்டத்தில் நாளைக்கே பணத்தைக் கொடுக்கும் திட்டமல்ல. சில அதிமேதாவிகள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில்தான் அதிகப் பலன்கள் என்றார்கள். தமிழ்நாடு அரசின் அரசாணையில் இரண்டு ஓய்வூதியத் திட்டங்களில் எது வசதியோ அதை 2026-க்கு முன் வேலைக்குச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டில் எது என்றால், தமிழ்நாடு அரசின் உறுதியளிப்பு ஓய்வூதியத் திட்டம்தான் வேண்டும் என்பவர்களே, மிக மிக அதிகமாக உள்ளனர். அதுதான் அ.தி.மு.க., பா.ஜ.க.வைப் புலம்ப வைத்திருக்கிறது.

...வினா தொடரும்.

## ஃப்ளாஷ்பேக்



### நெஞ்சம் மறக்காத காவியம்!



ஜி.ரவி

2008-ஆம் ஆண்டு, என் அன்புச் சகோதரி மேட்டூர் நகர துணைச் செயலாளராகப் பதவி ஏற்றுக்கொண்டு, அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்களையும், இனமானப் பேராசிரியர் அவர்களையும் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அன்றையப் பொருளாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்களோடு, 'சேலத்துச் சிங்கம்' வீரபாண்டியார் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்தித்த இந்தப் படம் நெஞ்சம் மறக்காத காவியம்.

– ஜி.ரவி,
27-வது வார்டு முன்னாள் செயலாளர்,
மேட்டூர் நகரம், சேலம் மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சேது சாலைத் திட்டம்!

1958-ஆம் ஆண்டு மே 10, 11 தேதிகளில் தஞ்சை மாவட்டக் கழகத்தின் மூன்றாவது மாநாடு திருவாரூரில் நடைபெற்றது. மாநாட்டில் 'சேது சாலைத் திட்டம்' நிறைவேற்றப்பட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. கடலோரத்தில் கிடைக்கக்கூடிய இயற்கை வளங்களை, விரைவில் ஓர் இடத்தில் இருந்து, மற்றொரு இடத்துக்குக் கொண்டு செல்வதற்கு கடலோரப்பட்டினங்களை இணைத்து, ஆங்காங்கே கிடைக்கக்கூடிய வளங்களை நன்கு பயன்படுத்த, சேது சாலைத் திட்டம் உதவும் எனத் தீர்மானம் வலியுறுத்தியது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.